முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கமலமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

03.03.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **மக்களை காக்கும் சக்தியாக**
**மாதவசியாக வந்த அண்ணலே**
**தேக்கமிலா தருமம் செய்து**
**தேசமெங்கும் தருமபலம் பெருக்கிய வள்ளலே**
2. வள்ளலே வாழும் ஞானியே
வல்லமைபட உன் பெருமை கூறி
இல்லாமை என்பது இல்லா நல்லுலகமைய
இயம்பிடுவேன் நித்ய பிரசன்ன ஆசி
3. ஆசியை **விளம்பி சால் திங்கள்**
**அறிவிக்க மூவைபீர் திகதி கதிர் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிற்றுக்கிழமை)**
**நேசமுடன் கமலமுனிவர் யானும்**
நிலவுலக நலம் கருதி உரைப்பேன்
4. உரைக்கவே மக்களின் பிரச்சினை
உணவு உறைவிட உடைமைகளென
குறைவின்றி பூர்த்தி காணும்படி
குவலயத்தில் இடர் விலகி நன்மை காண
5. காணவே கலிகால மக்களெல்லாம்
கட்டாயம் தானதரும நெறியான
ஞானதேசிகன் உண்மை வழி வந்து
ஞாலமதில் சன்மார்க்க நெறி ஏற்று
6. ஏற்றுமே முருகப் பெருமானின்
இணையிலா வழிபாட்டுக்கு வருக
ஆற்றல்பட மக்கள் தேவைகள்
அகிலமெங்கும் பூர்த்தி ஆகும்
7. ஆகவே தலைவனாக அரங்க ஞானியை
அனைவரும் ஏற்றுத் தொடர
யுகமெங்கும் புகழ் பரப்பி
உலகோர் தொண்டர்களாகி வர
8. வருகவே மக்களிடை ஞானமும்
வளமான வல்லமையான சூழலும்
முருகா எனும் செபதபம் பெருக
முழுமையான இயற்கை பாதுகாப்பும்
9. காப்பான மக்கள் சக்தியும்
கண்ணியமான தலைமைகளும் உருவாகி
ஒப்புதல்பட எல்லா தேசமும்
ஓங்காரம் வழி ஒன்றிணைய நேரும்

10. நேருமைபட தருமபலம் குன்றா
நிருவாக பலம் பெருகி உயர
வருமுலகில் பதவியாளர்களும்
வணங்கி அரங்கன் தயவுபெற வேண்டும்

11. வேண்டிவர துறையூர் மண்ணில்
வேலவனை காண நேரிடும்
தொண்டென இணைய நிலை உயரும்
தெரிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கமலமுனிவர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

மக்களை காத்து ரட்சிக்கின்ற மகாசக்தி வடிவமாக மகாதவசியாக வந்துதித்த அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிக மகா ஞானியே தடையின்றி தளராது தருமங்களை அளவிலாது தொடர்ந்து செய்து தேசம் எங்கும் தர்மபலத்தினை பெருக்கிய வள்ளலே வாழும் மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே வல்லமைமிக்க உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 19ம் நாள் 03.03.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கமலமுனிவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கமலமுனிவர்.

மக்களின் அத்தியாவசிய பிரச்சனைகளான உணவு, உடை, தங்குமிடம், உடைமைகள் என அடிப்படை தேவைகள் எல்லாம் குறைவின்றி பூர்த்தி அடைந்து துன்பம் இல்லாத வாழ்வை இடர்கள் எல்லாம் விலகி நல்வாழ்வை கலிகாலத்திலும் பெற்று வாழ்ந்திட வேண்டும் எனில் கலிகால மக்கள் எல்லாம் கட்டாயம் தானதருமத்தின் அடிப்படையினால் ஆனதும் உண்மை ஞானம் கூறும் தூயநெறியுமாகிய ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானநெறிக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு உலகினில் தூய சன்மார்க்க நெறிப்படி வாழ்ந்து முருகப்பெருமானை தினம்தினம் மறவாமல் மனம் உருகி பூஜைகள் செய்து வந்தால் முருகப்பெருமானின் அருளும் கிட்டி அரங்கமகா தேசிகனாரின் ஆசிகளும் கிட்டி ஆற்றல் பெருகி மக்களின் தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும்.

ஆதலினாலே உத்தம மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனை தலைவனாக குலகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கமகா தேசிகனாரின் புகழினை உலகமெங்கும் பரப்பி உலக மக்களெல்லாம் அரங்கனை பின்தொடர்ந்து அரங்கனின் தொண்டர்களாக ஆகிட உலக மக்களிடையே ஞானம் பெருகி உலகமெங்கும் அமைதி உண்டாகி இயற்கை வளம் பெருகி வளமான வல்லமையான சூழல் உலகமெங்கும் பரவிடும்.

முருகா, முருகா, முருகா எனும் நாமஜெபங்கள் உலகினில் அதிகமாக ஒலிக்க ஒலிக்க உலகம் முழுமையான இயற்கை பாதுகாப்பை பெற்றிடும், மக்கள் சக்தியும் பெருகி, அருள்பாதுகாப்பும் நாட்டினில் பெருகி நாட்டினை ஆட்சி செய்ய கண்ணியமான தலைமைகள் உருவாகிடும். உலக நாட்டின் தலைவர்கள் எல்லாம் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக இருந்து எல்லா தேசங்களும் முருகப்பெருமானின் மூலமாய் முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மூலமாக ஒன்றிணைந்திடும் சூழல் உருவாகும்.

நாட்டினில் நேர்மையான நிலைகள் பெருகிடவும் தருமபலம் குறைவிலாது பெருகி, நிர்வாக பலம் பெருகி மேன்மையடைய வேண்டுமாயின் வருங்காலங்களில் பதவிகளில் இருப்போர் செயல்பட ஆறுமுக அரங்கமகா தேசிகனை வணங்கி அரங்கனின் தயவினை பெற்றிட வேண்டும். அரங்கமகா தேசிகனை உள்ளன்போடு நம்பிக்கையுடன் வந்து வணங்கி அரங்கன் தயவை பெற்றால், ஓங்காரக்குடிலிலே அவர்கள் அரங்கன் உருவில் முருகப்பெருமானை காணும் வாய்ப்பை பெறுவார்கள். அரங்கனின் தானதருமப் பணிகளிலே தொண்டுகள் செய்து தொண்டர்களாக ஆகிட அவர்களது நிலை மேன்மேலும் உயர்வடையும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கமலமுனிவர்.

–சுபம்–